## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| HMOP.No. 78/2021 | Date : 22.07.2025 | RW 1 |
|---|---|---|
| Name: சூர்யா | க/பெ.நடராஜன் | |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின்படி குழந்தை ஞானசேகர் 2008 ல் பிறந்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்த பின்னிட்டு கடந்த 16 வருடங்களாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். இரண்டு முறை தான் மனுதாரர் என் குழந்தையை நீதிமன்றத்தில் வைத்து பார்த்துள்ளார். ஜீவனாம்ச வழககிற்கு வரும்போதும், விவாகரத்து வழக்கிற்கு வரும்போதும் நான் தனியாகதான் நீதிமன்றத்திற்கு வருகிறேன் என்றாலும் குழநதையை அழைத்து வரவில்லை என்றால் சரிதான். என் மகன் பள்ளிக்கு செல்வதால் அவரை அழைத்து வர முடியவில்லை. மனுதாரரிடம் பணம் பெறுவது மட்டுமே குறிக்கோளா உள்ளேன் என்றாலும் நானும் என் குடும்பத்தாரும் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு இதுநாள் வரை எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பல பஞ்சாயத்துக்கள் பேசி பார்த்தோம். மனுதாரர் அதற்கு உடன்படவில்லை. நான் வழக்கிற்காக பஞ்சாயத்து பேசினோம் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினோம் என்று நான் எதிர் உரையிலும், பிரமாண வாக்கு்முலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பஞ்சாயத்து செய்தோம். மனுதாரரை உடல் ஊனமுற்றவர் என்றும் கருமை நிறமுள்ளவர் என்றும் உதாசீனப்படுத்தி வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தனியாக வாழ்வதற்கு என் பெற்றோர்கள் அரசு வேலையில் இருப்பதால் என்னை அவர்களே கவனித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது பெற்றோர் மனுதாரருக்கு நிரந்தர வேலை இல்லை என்பதாலும் நிரந்தர வருமானம் இல்லை என்பதாலும் அவரை புறக்கணித்து என்னை தனியாக வசதியாக வாழ வைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் ஆரம்ப காலத்தில் இருந்தே மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் மதிக்கவில்லை என்றாலும் அவரை குடும்பமமாக சென்று அடித்து உதைத்தோம் என்றாலும் கொடுமைப்படுத்தினோம் என்றாலும் சரியல்ல. அதற்காக 8.1.2010 ந்தேதி காலை 10 மணிக்கு மனுதாரர் ராசிபுரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் அது சம்மந்தமாக விசாரணை செய்ய அழைத்த போது நானும் என் குடும்பத்தாரும் மேட்டூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் மீது அன்று மாலை 4 மணிக்கு வரதட்சணை கொடுமை செய்வதாக பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 7.5.2011 ந்தேதி மனுதாரர் சாலை விபத்தில் அடிப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும்

நானும் எனது தாயாரும் மருத்துவமனைக்கு சென்று மனுதாரரை நலம் விசாரிக்காமல் இன்னும் சாகவில்லையா என்று அவர் மனதை புன்படுத்திவந்தோம் என்றால் சரியல்ல. எங்களை பார்க்கவே அனுமதிக்கவில்லை. மனுதாரர் சொல்வது போல் விபத்து ஏதும நடைபெறவில்லை மனுதாரர் வேறு ஒரு பெண்ணோடு இருசக்கர வாகனத்தில் சென்றபோது அஸ்தம்பட்டி ரவுண்டானா அருகே சென்றபோது ஒருபெண்ணுடன் வாக்குவாதம ஏற்பட்டு மனுதாரர் தானே இருசக்கர வாகனத்தின் முகக்கண்ணாடியை உடைத்து தனக்கு தானே கழுத்தை அறுத்துக்கொண்டதால் தான் மருத்துவமனையில் சேர்ந்தார். நான் அனுமதிக்கவில்லை என்றுகூறிவிட்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரை மருத்துவமனையில் வைத்து வேண்டிய பணிவிடைகள் செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை சந்திக்கவேயில்லை என்றாலும் மனுதாரர் வேறு ஒரு பெண்ணை விரும்புவதாக என்னிடம் ஒருபோதும் கூறவில்லை என்றாலும் எங்களுக்குள் எப்போதும் சண்டை மட்டுமே ஏற்பட்டுள்ளது என்றாலும் நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளதுபோல் எந்த சண்டையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தான் இரண்டாவது திருமணம் செய்வதற்காக என் தாயாரிடம் ரூ.3 லட்சம் வாங்கி வரும்படி கூறியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உடல் ஊனமாக இருப்பதாலும் தோல் வியாதி இருப்பதாலும் எப்போதும் அரசு வேலை தனக்கு கிடைப்பதாக கூறி என்னை திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்தான் மனுதாரரை எனது சகோதரியின் கணவரோடு ஒப்பிட்டு தரக்குறைவாக மனுதாரரை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 18 ஆண்டுகளாக மனுதாரரான என் கணவரின் வருகைக்காக நான் காத்திருந்ததாகவும் இல்வாழ்க்கை தொடங்க முயற்சி செய்ததாகவும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் இன்று வரை இரண்டாம் திருமணம் செய்யவில்லை என்றாலும் மனுதாரர் உழைத்து அவரது ஊதியத்தை எனக்கும் என் குழந்தைக்கும் செலவு செய்வதற்கே போதுமானதாகவும் முடியாத சமயத்தில் சிறைக்கு சென்று வருவதுமாக உள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் ராசிபுரம் நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் அவரது வழக்கறிஞர் திரு.இளங்கோ என்பவரின் மனைவி விபத்தில் இறந்துவிட்டதால் அவர் நீதிமன்றத்திற்கே வராமல் இருந்ததால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் நான்கரை வருடம் கழித்து என் வசிப்பிடம் இந்நீதிமன்ற எல்லைக்குள் இருப்பதால் இங்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நாமக்கல் முதன்மை மமாவட்ட நீதிமன்றத்தில் GWOP NO 114/2015 ன்ற வழக்கு தாக்கல்செய்து வழக்கறிஞர் ஆஜராகததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு மனுதாரர் காரணமல்ல என்றால் சரியல்ல. கடந்த 2024ம் வருடம் தான் மனுதாரர் குழந்தையை பார்ப்பதற்கு வருவதில்லை என்று பொய்யாக சொல்லியுள்ளேன்

என்றால் சரியல்ல. நான்தான் மனுதாரருக்கு எனது மகனை காண்பிப்பதில்லை என்றாலும அவர் பார்க்க வந்தாலும் அவரை பார்க்க அனுமதிப்பதில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் ரூ.3,500/– ஜீவனாம்ச தொகை போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் மனுதாரருடன் வாழ்க்கை வாழ்வதற்கான எந்த ஒரு காரணத்தையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் சரியல்ல. விவாகரத்து மனு தாக்ல செய்வதற்கு முழுக்காரணமே நானும் என் குடும்பத்தார் என்றாலும் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் மல்லூர் பேரூராட்சியில் பிணம் எரிக்கும் தற்காலிக வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் பெயிண்ட்டிங் வேலை செய்கிறார். 2023 க்கு பின்னிட்டு மனுதாரர் மல்லூர் பேரூராட்சியில் பிணம் எரிக்கும் தற்காலிக வேலை செய்து வருகிறார் என்றாலும் பணம் வாங்குவதற்காக கந்து லேவாதேவிசெய்வதாகவும், பெயிண்டிங் வேலை செய்வதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக் கொண்டதன்படி விவாகரத்து வழங்கி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/–சூர்யா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.